# ஆண்டின் பொதுக்காலம் 22 ஆம் வார ஞாயிறு
# திருவழிப்பாட்டு ஆண்டு C (01-09-2013)

## திருப்பலி முன்னுரை:

தந்தையாம் இறைவனின் அன்புமக்களாகிய உங்கள் அனைவருக்கும் ஆண்டின் பொதுக்காலம் 22 ஆம் வார ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் இவ்வேளையில் வாழ்த்துக்கூறி இந்நாளில் உங்களுக்கு இறையாசீர் பெருக வேண்டுகிறேன்.

இன்றைய நற்செய்தி நம்மில் ஒரு கேள்வியை எழுப்புகிறது: நான் ஒரு நல்ல விடயம் செய்யும்பொழுது, என்னுடைய நோக்கம் என்ன? என்னுடைய எதிர்பார்ப்பு என்ன? நான் சுய நலத்துக்காக செய்தேனா? அல்லது மற்றவர்களின் நலனுக்காக செய்தேனா?.

மனிதர் நாம் கூடிவரும் இடங்கள் மகிழ்ச்சியும் மன நிறைவும் தரவேண்டும். விருந்து வீடுகளுக்குச் சென்றால் நம்முடைய கவனம் எதில் இருக்கும், சிலருக்கு இடம்பிடிப்பதில் இருக்கும், சிலருக்கு பரிமாறும் உணவில் இருக்கும், சிலருக்கு வந்திருக்கும் ஆட்களில் இருக்கும், சிலருக்கு அணிந்திருக்கும் ஆடையில் இருக்கும். இயேசுவின் எண்ணமெல்லாம் வந்திருந்த ஆட்களிலும் அவர்களின் தேவைகளிலும் இருக்கிறது. அடுத்த மனிதனுக்கு எப்படி உதவலாம் என்பதில் இருக்கிறது. எதிரே அமர்ந்திருந்த நோயுற்ற மனிதன்மேல் கவனமும் கரிசனையும் உள்ளது. முதலிடம், முதல்மரியாதை இவற்றில் அவருக்கு ஆர்வம் இல்லை. கடைசி இடத்து மனிதன், அவனது தேவை இவையே அவரது உள்ளத்தை உறுத்தியது. ஆனால் பரிசேயரின் கவனமெல்லாம் விருந்தில் முதலிடம், இயேசு ஏதாவது தவறு செய்வாறா, எங்காவது தப்பு நடைபெறுமா என்பதில் உள்ளது. இத்தகைய எண்ணங்களோடு மனிதர்கள் கூடும் இடங்களில் மகிழ்ச்சியும் மனநிறைவும் விட பிரச்சினையும் வேதனையும்தான் மிகும். கானாவூர் திருமணவீட்டில் நம் அன்னையின் ஆர்வமெல்லாம் திருமணவீட்டாருக்கு எந்த பிரச்சினையும் வந்துவிடக்கூடாது என்பதால், திராட்சை இர தட்டுப்பாட்டை யாருக்கும் தெரியாமல் தீர்த்து அங்கு பெருமகிழ்ச்சி உண்டாக்கியதைப் பார்க்கிறோம். இயேசுவைப்போல செய்ய தொடங்குவோமா!.. .. வரம் கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**“நம்பிக்கை அளிப்பவராம் இறைவா,**

உம் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் நற்கருணை பிரசன்னத்திலே, உம் வார்த்தையிலே இணைந்திருந்து உம் திருச்சபையை சிறப்புற வழிநடத்தி செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**திக்கற்ற பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் கணவனை இழந்தாளின் காப்பாளராகவும் இருக்கும் ஆண்டவரே!**

கவலை, நோய், துன்பம் போன்றவற்றிலிருந்தும் விடுதலை பெறத் தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுதலைப் பெற்றுக்கொள்ளவும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்.

**நீர் வாக்களித்த அனைத்தையும் எமக்கெனச் செய்து முடிக்கும் ஆண்டவரே!**

இப் மண்ணிலே புலம்பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்களும், எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும், உமது அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முற்படும் எல்லாவித தீய சக்திகளையும் இனங்கண்டு அவற்றை முறியடித்து, உமக்கேற்றவர்களாக வாழ எமக்கு வேண்டிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றென்றும் மாறாத பேரன்பு உடையவரான தந்தையே!**

உலகிலிருந்து தவறுகள் அகலவும், நோய்கள் நீங்கிப் பஞ்சம் ஒழியவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், வழிப்போக்கர் பாதுகாப்புப் பெறவும், பயணம் செய்வோர் நலமாக நாடு திரும்பவும், நோயுற்றோர் நலம் பெறவும், இறக்கின்றவர் மீட்பின் நிறைவு பெறவும் வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வாழ்வளிகும் வார்த்தைகளைக் கொண்டுள்ள தந்தையே!**

நன்மைக்கு ஊற்றே நீர் ஒருவரே என உணர்ந்து நாங்கள் வாழ்ந்திட அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் தந்தையே!**

பலியிலே பங்கேற்கும் நாங்கள் உம்மை ஏற்று பயணிப்பதால் வரும் இடர்பாடுகளை ஏற்று துணிவுடன் சந்திக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.